**மீரிகம பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 27 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மீரிகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட ஆகக் குறைந்த பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், நிலையான சொத்துக் கணக்குகளில் வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கையொன்று வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உரித்துறுதி இலக்கம் 268 இன் மூலம் 2016 யூலை 29 ஆந் திகதி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த வேவெல்தெனிய பெலஹிட்டிவத்த கெலே காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேவெல்தெனிய அலுவலகக் கட்டிடத்தின் நிலத்தைத் தயாரித்தல் மற்றும் பாதுகாப்பு கொட்டகையை நிர்மாணித்தல் என்பவற்றுக்காக மீளாய்வாண்டில் ஏற்பட்ட செலவினம் ரூபா 2,102,395 ஆக இருந்த போதிலும், கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி 4,204,790 ஆனமையால் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 2,102,395 இனால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சுகாதாரத் தொழிலாளர் மற்றும் சாரதி ஓய்வு மண்டபம் கட்டிட நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய பெறுமதி ரூபா 5,677,371 ஆக இருந்த போதிலும் காணி மற்றும் கட்டிடக் கணக்கில் ரூபா 3,792,380 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபை காணியில் சிறு கொங்கிறீட் கற்களைப் பதிப்பதற்காக இரண்டு கட்டங்களின் போது செலவிடப்பட்ட ரூபா 2,037,849 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் நிர்மாணங்களுக்குரியதான 10 சதவீத நிறுத்தி வைத்தல் பணம் மூலதனமாக்கப்படாமையினால் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 375,535 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2017 ஆம் ஆண்டில் ஏலமிடப்பட்ட வேவெல்தெனிய ஹெப்பிலேன்ட் எஸ்டேட் காணியின் பொது வசதிகளுக்கான பகுதியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் இழுவைப் பெட்டிக்குரிய கடன் மீதி ரூபா 3,285,000 தொகை பயன்பாடுகள் சேவைக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அது திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிகளுக்கும் இடையே 6,368,665 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) ரூபா 6,553,908 தொகையான முன்செலுத்தப்பட்ட மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 6,059,371 தொகையும், 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 475,269 தொகையும் காணப்பட்டது.

(ii) தனியார் நிறுவனத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 3,748,794 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நான்கு வருடங்களுக்கு மேல் காலாவதியான பத்து காசோலைகளுக்குரிய ரூபா 6,708 தொகையான மதிப்பிழந்த காசோலை மீதியொன்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 68,314,633 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட 03 வருடங்களுக்குக் குறைவான ரூபா 3,467,230 தொகை, 03 வருடங்களுக்கு மேற்பட்ட 04 வருடங்களுக்குக் குறைந்த ரூபா 266,044 தொகை மற்றும் 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,860,797 தொகைகள் என்பன காணப்பட்டன.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

வைப்புப் பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 8,833,248 தொகையான மீரிகம உப அலுவலகத்திலிருந்து மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதியை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டம் | | ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வருவித்து செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு | | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வீதிகளின் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட பதிவேடு வர்த்தமானியின் மூலம் பிரசுரித்து சபையின் உரித்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவு மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய WP/LPD/10/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4(ஆ) பந்தி | | உள்ளூராட்சி நிறுவனத்திற்காக ஆகக்கூடிய ஆதனவரி அளவைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இயலுமானவரை அபிவிருத்தியடைந்த கிராமப் பிரதேசங்களாக வெளியிடுவதற்கு முடியுமான அதிகாரப் பிரதேசங்களை இனங்கண்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | நிதிப்பிரமாணம் 571(2) | 4,569,824 | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,448,237 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,520,603 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 14,130,000 | 11,662,300 | 11,816,312 | 5,325,853 | 1,081,880 | 14,134,948 | 18,267,203 | 5,479,865 |
| வாடகை | 15,895,000 | 14,999,735 | 14,547,328 | 1,131,046 | 13,768,000 | 12,469,850 | 12,536,535 | 678,639 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,896,100 | 2,201,172 | 2,200,172 | 66,775 | 1,507,150 | 1,466,145 | 1,471,795 | 65,775 |
| ஏனைய வருமானம் | 240,000 | 666,768 | 509,290 | 157,478 | - | - | - | - |
| | 32,161,100 | 29,529,975 | 29,073,102 | 6,681,152 | 16,357,030 | 28,070,943 | 32,275,533 | 6,224,279 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரியும் வரியும் நிலுவை மீதி ரூபா 5,325,853 தொகை மற்றும் வாடகை நிலுவை மீதி ரூபா 1,131,046 தொகை ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 ஆதனவரி

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ஆதனவரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரை ரூபா 1,611,647 தொகக, 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை ரூபா 586,670 தொகை, 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை ரூபா 633,326 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேல் ரூபா 2,099,040 தொகை என்பன சபைக்கு அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

(ஆ) பெறுமதியின் அடிப்படையில் சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரி மீதி மற்றும் அலகுகளின் எண்ணிக்கை என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பெறுமதி | ஆதனவரி அலகுகளின் எண்ணிக்கை | நிலுவை மீதி |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 10,000 இற்கு குறைவு | 3,595 | 2,813,433 |
| 10,000 - 50,000 | 33 | 212,455 |
| 50,000 இற்கு மேல் | 03 | 1,907,825 |
| மொத்தம் | 3,631 | 4,933,713 |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

#### (அ) வியாபார அனுமதிப்பத்திரம்

2017 ஆம் ஆண்டிற்காக 1,219 வியாபார நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதவற்கு பத்திரங்கள் பொது சுகாதார பரிசோதகர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதில் அங்கீகரிக்கப்பட்டு மீளக்கிடைத்த விண்ணப்பங்கள் 1,176 மாத்திரமாகும்.

#### (ஆ) கைத்தொழில் மற்றும் வியாபார வரி

(i) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி இலக்கம் 07 இன் 59 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு வருட ஆரம்பத்தின் போதும் மேற்கொள்ளப்பட வேண்டிய கைத்தொழில் தொடர்பான மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கைத்தொழில் மற்றும் வியாபார வரி மீதியான ரூபா 117,758 தொகையில் வேவெல்தெனிய உப அலுவலகத்தில் 3-5 வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 31,560 தொகை மற்றும் பள்ளேவல மற்றும் மீரிகம உப அலுவலகங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 44,530 ஆக இருந்தன.

### 2.2.5 ஏனைய வருமானம்

#### (அ) விளம்பர அறிவித்தல்

(i) 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய 1947/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 1978/22 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) மேல் மாகாண சபையின் வர்த்தமானி என்பவற்றின் பிரகாரம் பிரகாரமும் விளம்பர அறிவித்தல்களுக்காக அங்கீகாரம் வழங்கும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அல்லது அறிவித்தலின் மாதிரி ஒன்று சமர்ப்பிக்கப்படாதிருக்கும் போது அறிவித்தலின் தன்மை மற்றும் காட்சிப்படுத்தப்படுகின்ற காலஎல்லை தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் மீரிகம உப அலுவலகத்தினால் அறிவித்தல் பதாகைகளுக்காக கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) அறிவித்தல் பதாதை வருமானம் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று மீரிகம உப அலுவலகத்தால் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை.

(iii) வியாபார அறிவித்தல் கட்டணம் அறவிடப்பட்ட பின்னர் அறிவித்தல் பதாதைகளில் பிரதேச சபையின் உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தொலைத்தொடர்பு கோபுரம்**

பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் 64 தொலைத்தொடர்பு கோபுரங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு உப விதிகளை அங்கீகரிப்பதன் மூலம் வருமானத்தைச் சேகரிப்பதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பிரதேசசபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 12 விடயங்களுக்கு மாத்திரமே உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய 12 இலக்குகளுக்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) கழிவுப்பொருட்களை இறுதியாக கொண்டு போடுகின்ற காணியில் போடுவதற்காக சுற்றாடல் அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்று காணப்படவில்லை.

(ii) பிரதேச சபையினால் கொண்டு போடப்படுகின்ற கழிவுகள், காணி உரிமையாளரினால் சுகாதார பாதுகாப்புக்காக மூடி வைக்க வேண்டிய போதிலும், சபையின் வாகனங்களிலிருந்து மண்ணை எடுத்துச் சென்று கழிவுப்பொருட்களை மூடுதல் மற்றும் சபையின் ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டமையினால் அதற்கான கிரயமொன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iii) கழிவுப்பொருட்கள் இறுதியாக கொண்டு போடப்பட்ட டிப்பர் வாகன எண்ணிக்கை தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கு ஓட்ட அட்டவணை மூலம் காண்பிக்கப்படவில்லை.

(iv) அகற்றப்படுகின்ற கழிவுப்பொருட்கள் குறித்துரைத்த அளவிடைத் திட்டத்தை பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேலையினை அடிப்படையாகக் கொண்டு செலுத்துவதற்குப் பதிலாக காலத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 08 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 02 | 02 | - |
| மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| இரண்டாம் நிலை | 46 | 42 | 05 |
| ஆரம்ப நிலை | 116 | 90 | 27 |
| அமைய / நாட்கூலி / ஒப்பந்த | - | 26 | - |
| 28/2014 நிரந்தர | 45 | 43 | - |
| மொத்தம் | 210 | 204 | 32 |

சுகாதார கண்காணிப்பாளர் பதவி 2009 ஆம் ஆண்டிலிருந்தும், மருந்து கலவையாளர் பதவி 2015 ஆம் ஆண்டிலிருந்தும், இரண்டு வருமான பரிசோதகர் பதவிகள் 2006 ஆம் ஆண்டிலிருந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டமையினால் சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தையும், ஆயுள்வேத சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளையும் மற்றும் வருமானத்தை சேகரிக்கும் நடவடிக்கைகளையும் செயற்திறனானதாக நடாத்திச் செல்வதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) ஊழியர் கடன்**

ஓய்வுபெற்றுச் சென்ற 23 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 294,726 தொகை, சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 195,945 தொகை

மற்றும் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 795,366 தொகை என்பன முறையே அறவிட வேண்டியிருந்தன.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

#### (அ) ஆதனவரி அறவிடல்

9,266 ஆதனவரி அலகுகளில் இருந்து 2017 ஆம் ஆண்டின் போது 6,515 ஆதனவரி அலகுகளிலிருந்து மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன.

#### (ஆ) ஏலமிடப்பட்ட காணி

காணிகள் கூறிடப்பட்டு விற்பனை செய்யும் போது பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) பிரிவின் பிரகாரம் அந்தக் காணிகளின் விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் அறவிட வேண்டிய ஒரு சதவீத வரிக்குப் பதிலாக 2017 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட 06 காணிகளிலிருந்து வருமானக் கட்டுப்பாட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு சதவீத வரி அறவிடப்பட்டிருந்தது.

#### (இ) கடைகளை வாடகைக்கு வழங்கல்

மீரிகம உப அலுவலகத்திற்குரிய 256 கடைகளில் 241 கடைகளின் வாடகை உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் சபையினால் உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) பொதுமக்கள் முறைப்பாடுகள்

பிரதேச சபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக முறையான திட்டமொன்று பின்பற்றப்படாமையின் காரணமாக சபைக்குக் கிடைக்கின்ற மொத்த முறைப்பாடுகளிலும் தீர்வு காணப்படாதுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என அவதானிக்க முடியாதிருந்தது. பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பான பதிவேட்டில் தீர்மானத்திற்குரிய கடிதங்களை அனுப்புதல் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மாத்திரம் பதியப்பட்டிருந்ததுடன் சபைக்குக் கிடைக்கின்ற சகல பொதுமக்கள் முறைப்பாடுகளும் பதிவேடுகளுக்குக் கொண்டுவரல் இடம்பெற்றிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நூலக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் காணாமல் போயிருந்த ரூபா 20,223 பெறுமதியான 95 புத்தகங்கள் மற்றும் பாவனைக்கு எடுக்க முடியாது அகற்றப்பட வேண்டிய ரூபா 35,921 பெறுமதியான 331 புத்தகங்கள் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு உரித்துக் காணப்படுகின்றதென குறிப்பிடப்பட்ட பொது காணிகளில் சிலவற்றிற்காக உரித்துறுதி காணப்படாதிருந்ததுடன் சபை நிதியத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்ட சில பொது கிணறுகளுக்காகவும் உரித்துறுதி காணப்படவில்லை.

(ஈ) சபைக்குச்சொந்தமான பொதுக் காணிகளின் எல்லையினை சரியாக எல்லைப்படுத்தி சபைக்கு சொந்தமானது என பெயர்ப் பதாதை பொருத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வாகனப் பயன்பாடு

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 4,999,500 பெறுமதியான பெகோலோடர் (ஒல்லாந்து) 2014 ஏப்ரல் 20 ஆந்திகதி முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அதனை பழுதுபார்த்து பாவனைக்கு எடுக்காமையினால் பிரதேச சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

(ஆ) ரூபா 850,000 பெறுமதியான உழவு இயந்திரமொன்று 2016 நவம்பர் 25 ஆந் திகதியிலிருந்தும், ரூபா 204,900 பெறுமதியான உழவு இயந்திரமொன்று 2016 பெப்ரவரி 08 ஆந் திகதியிலிருந்தும் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் பிரதேச சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைத் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மை சுற்றறிக்கை இலக்கம் 8 இன் 4.2.1(பீ) மற்றும் (சீ) இன் பிரகாரம் வருடாந்த விரிவான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்

**(அ) "நெக்பா" கணனி முறைமை**

பிரதேச சபையினால் அலுவலக செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஆதனவரி, நானாவித வருமானம், கணக்கு நடவடிக்கைகள், இருப்புக் கட்டுப்பாடு மற்றும் வீதி விளக்கு தொடர்பான துறைகளை முகாமைத்துவ மென்பொருள் முறைமை ஒன்றை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,637,000 செலவிடப்பட்டிருந்தது. இந்த மென்பொருள் முறைமையைக் கொள்வனவு செய்வதலின் அடிப்படை நோக்கமான 05 துறைகளின் தரவுகளைச் சேகரித்தல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளைச் செய்வதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஆதனவரி வருமான முகாமைத்துவம் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) டயர் கொள்வனவு செய்தல்**

2017 ஆம் ஆண்டில் சபையின் வாகனங்களுக்குத் தேவையான டயர்களைக் கொள்வனவு செய்யும் போது பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் ஒரு நிறுவனத்திலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.5.3 ஒப்பந்த நிர்வாகம்

நிதி, திட்டமிடல் அமைச்சின் 2012 சனவரி 05 ஆந் திகதிய PED/PMD/Clari/11/02 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 01/2012 ஆம் இலக்கப் பிரிவின் 3.1 ஆம் இலக்கத்தின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக நேர் ஒப்பந்த கையளித்தலின் போது

திணைக்களத்தின் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற இரண்டு முகவர்களை உள்ளடக்கிய மூன்று தரப்பினர்களைக் கொண்ட குழுவொன்றின் மூலம் தகைமைகளைப் பரீட்சித்து உறுதிப்படுத்தப்படாமல் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு மீளாய்வாண்டின் போது ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | (i) | ஆதனவரி மற்றும் கடை வாடகை மதிப்பீடு செய்யப்படாமை |
| | | (ii) | குறைவான பயன்பாட்டுடன் கடைகள் காணப்பட்டமை |
| | | (iii) | ஆதனவரி சதவீதம் திருத்தம் செய்யப்படாமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீடு நடைமுறை நிலைமைக்கு இணங்காமை. |
| | | (ii) | முறையற்ற பிரகாரம் செலவின விடயங்களுக்கடையே நிதி மாற்றப்பட்டமை. |
| (இ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | இருப்புக்களைக் கொள்வனவு செய்யும் போதும், விநியோகிக்கும் போதும் பதிவேடுகளில் உள்ளடக்காமை. |
| | | (ii) | பௌதீக ரீதியில் காணப்படாத சொத்துக்கள் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தமை. |
| | | (iii) | சொத்துக்களுக்குரிய உரித்தை உறுதிப்படுத்துவதற்கு உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை காணப்படாமை |
| | | (iv) | பொருட் பதிவேடு பேணப்படாமை |
| (ஈ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | கழிவுப்பொருள் வரி அல்லது கட்டணம் அறவிடப்படாமை |
| | | (ii) | கழிவுகள் வகைப்படுத்தப்பட்டு வழங்குவதற்கு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டமை |
| | | (iii) | கழிவுப்பொருட்களை அகற்றும் செலவுகள் அதிகரித்திருந்தமை |